
# இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.3.1.B


எண்ணியல் - பின்னங்கள் மற்றும் தசம எண்கள் - அறிமுகம்

## எண்ணியல் - பின்னங்கள் மற்றும் தசம எண்கள் - அறிமுகம்

பின்னங்களை தசம எண்களாகவும், தசம எண்களை பின்னங்களாகவும் மாற்ற இயலும். கீழே கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளை கவனியுங்கள்.



- கொடுக்கப்பட்டுள்ள வட்டம் இரு சமபாகங்களாக பிரிக்கப்பட்டு, ஒரு பாகம் நிழலிடப்பட்டுள்ளது.
- மொத்தப் பாகங்களின் எண்ணிக்கை 2. நிழலிடப்பட்ட பாகங்களின் எண்ணிக்கை 1. இதனை பின்ன வடிவில், $\frac{1}{2}$ என எழுதுகிறோம்.
- இதன் பொருள், இரு சமபாகங்களில் ஒரு பாகம் நிழலிடப்பட்டுள்ளது என்பதாகும்.
- $\frac{1}{2}$ என்பதை தசம வடிவில் எழுத, பகுதியை 10 -ன் மடங்குகளாக மாற்றி, பின்வருமாறு குறிப்பிட வேண்டும்.
- $\frac{1}{2} = \frac{1\times5}{2\times5} = \frac{5}{10} = 0.5$



- கொடுக்கப்பட்டுள்ள சதுரம் நான்கு சமபாகங்களாகப் பிரிக்கப்பட்டு, மூன்று பாகங்கள் நிழலிடப்பட்டுள்ளன.
- மொத்தப் பாகங்களின் எண்ணிக்கை 4. நிழலிடப்பட்ட பாகங்களின் எண்ணிக்கை 3. இதனை பின்ன வடிவில் $\frac{3}{4}$ என எழுதுகிறோம்.
- இதன் பொருள், நான்கு சமபாகங்களில் மூன்று பாகங்கள் நிழலிடப்பட்டுள்ளன என்பதாகும்.
- $\frac{3}{4}$ என்பதை தசம வடிவில் எழுத, பகுதியை 10 -ன் மடங்குகளாக மாற்றி, பின்வருமாறு குறிப்பிட வேண்டும்.
- $\frac{3}{4} = \frac{3\times25}{4\times25} = \frac{75}{100} = 0.75$


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 24th June, 2022 :: 12:17 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.**
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**